இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 263 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 21 – ஞாயிற்றுக்கிழமை 04 மே 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 263 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 21 - Sunday 04 May 2025 - Chennai 16 Pages ₹ 5.00

## எந்தத் தடைகள் வந்தாலும் உரிமைகளை மீட்டு படிக்க வைப்போம்! கல்வியுடன்

# மாணவர்களுக்கு சமூக நீதியையும் கற்றுத்தர வேண்டும்!

## மாநில சுயாட்சி நாயகருக்கு கல்வியாளர்கள் நடத்திய பாராட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

**சென்னை, மே 4-**

**மாநில முதல்வர்கள் பல்கலைக் கழகத் துணை வேந்தர்களை நியமிக்கலாம் எனும் உரிமையினை மாநிலங்களுக்கு உச்சநீதிமன்றத்தின் மூலம் போராடி பெற்றுத் தந்த மாநில சுயாட்சி நாயகர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கல்வியாளர்கள் சார்பில் பாராட்டு விழா நேற்று, சென்னை ஜவகர்லால் நேரு உள் விளையாட்டரங்கில் நடைபெற்றது.**

**இவ்விழாவில் பங்கேற்று ஏற்புரை நிகழ்த்திய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், எந்தத் தடைகள் வந்தாலும், உரிமைகளை மீட்டு படிக்க வைப்போம் என்றும் கல்வியுடன் மாணவர்களுக்கு சமூக நீதியையும் கற்றுத் தரவேண்டும் என்றும் எழுச்சியுரையாற்றினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.5.2025) சென்னை, ஜவகர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில், பல்கலைக் கழகங்கள், சுயநிதி பொறியியல் கல்லூரிகள் கூட்டமைப்பு, தனியார் கலைக் கல்லூரிகள் கூட்டமைப்பு, அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளின் சார்பில் நடைபெற்ற “மாநில சுயாட்சி நாயகருக்கு மகத்தான பாராட்டு” விழாவில் ஆற்றிய உரை வருமாறு:

மாணவச் செல்வங்கள் எல்லாம் நன்றாக இருக்கிறீர்களா! மேடையில் இருக்கக்கூடிய எங்களுக்கே டயர்ட் ஆகிவிட்டது. நீங்கள் டயர்ட் ஆகவில்லை - எனர்ஜியோடு இருக்கிறீர்கள். இருந்தாலும், நான் சுருக்கமாக என்னுடைய ஏற்புரையை நிகழ்த்த விரும்புகிறேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியில் பங்கேற்று தலைவர் பொறுப்பை ஏற்று உரையாற்றிருக்கக் கூடிய அய்யா ஆசிரியர் அவர்களே,

நிகழ்ச்சிக்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மூத்த அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்களே,

முன்னிலை ஏற்றுள்ள சகோதரர் அமைச்சர் கோவி செழியன் அவர்களே,

அமைச்சர் எ.வ.வேலு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களே,

கழக பொருளாளர் டி.ஆர். பாலு அவர்களே,

தங்கை திருமதி கனிமொழி, ஜெகத்ரட்சகன் உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

தோழமை இயக்கத்தின் தலைவர்கள்

சகோதரர் செல்வப்பெருந்தகை அவர்களே,

தோழர் சண்முகம் அவர்களே,

தோழர் முத்தரசன் அவர்களே,

எழுச்சித் தமிழர் தொல்.திருமாவளவன் அவர்களே,

பேராசிரியர் அய்யா காதர் மொஹிதீன் அவர்களே,

மேடையில் அமர்ந்திருக்கக்கூடிய கல்வியாளர்கள்

முனிரத்தினம் அவர்களே,

மதிப்பிற்குரிய ஜி.விஸ்வநாதன் அவர்களே,

மேனாள் நீதியரசர் அக்பர் அலி அவர்களே,

அருட்தந்தை அருண் அவர்களே,

டாக்டர் நாராயணசாமி அவர்களே,

ஹரி கே.தியாகராஜன் அவர்களே,

டாக்டர் நந்தினி ரங்கசாமி அவர்களே,

முனைவர் ஜி. ரவி அவர்களே,

முனைவர் ஆறுமுகம் அவர்களே,

முனைவர் ராஜேந்திரன் அவர்களே,

பேராசிரியர் மன்னர் ஜவஹர் அவர்களே,

முனைவர் திருவாசகம் அவர்களே,

பிரின்ஸ் கஜேந்திரன் அவர்களே,

எ.வ.குமரன் அவர்களே,

ஸ்ரீராம், மகேந்திரன், திருமதி மலர்விழி, பீட்டர், சாய் பிரகாஷ் மற்றும் பங்கேற்றிருக்கக்கூடிய பேராசிரியர் பெருமக்களே,

என் பாசத்திற்கும், பேரன்பிற்குரிய மாணவச் செல்வங்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

**உங்கள் அன்புக்கும் - நம்பிக்கைக்கும் இன்னும் கடுமையாக உழைப்பேன்!**

கலை நிகழ்ச்சிகளின் வாயிலாகவும் - பாராட்டுரைகள் வாயிலாகவும் - நீங்கள் பொழிந்த அன்பில் நான் திக்குமுக்காடி விட்டேன் என்றுதான் சொல்ல வேண்டும்! நீங்கள் பாராட்டிவிட்டீர்கள் என்று நான் மகிழ்ச்சியின் உச்சத்திற்கு போகவில்லை. உங்களுடைய அன்புக்கும் - நம்பிக்கைக்கும் - எதிர்பார்ப்புக்கும் இன்னும் என்னை தகுதிப்படுத்திக் கொள்ள இன்னும் கடுமையாக உழைக்கவேண்டும் என்ற எண்ணம்தான் எனக்குள் ஏற்படுகிறது!

‘மாநில சுயாட்சி நாயகர்’ என்று இந்த விழாவுக்கான இன்விடேஷனில் போட்டிருக்கிறீர்கள்.

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

## மாவட்டக் கழக கூட்டத் தீர்மானம்!

2 ஆம் பக்கம்

